★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆனி 17 றம். 19 இதழ் 140

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 1—7—83

குழந்தையைத் தாலாட்டிக் கொண்டிருந்த

## தாயின் கழுத்தை வெட்டி ரூ. 2 லட்சம் நகை கொள்ளை!

(மட்டுவில்)

கைக்குழந்தைக்குப் பாலூட்டிவிட்டுத் தாலாட்டிக்கொண்டிருந்த இளம் பெண்ணை கழுத்தில் கத்தியால் வெட்டிப் போட்டுவிட்டுக் கொள்ளையர் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர். சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கப்பணத்தையும் இக்கொள்ளையர் கொண்டுசென்றுள்ளனர்.

இப்பயங்கர பரிதாப சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் மட்டுவில் தெற்கு செல்லப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள வீட்டில் நடைபெற்றது.

சுமார் 20 வயதுள்ள சுபாஜினி சிவராசா என்ற பெண்ணே பயங்கர கத்தி வெட்டுக்கிலக்கானவராவார். இவர் மயக்கநிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். இவரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

இவரின் கணவர் சிவராசா என்பவர் இ.போ.ச. பஸ்ஸில் கடமையாற்றுபவர். சம்பவதினம் சிவராசாவுக்கு அவரின் தாயாரான கண்மணி வைத்திலிங்கம் இரவுச்சாப்பாடு கொடுக்கச் சென்றிருந்தார். வீட்டில் தனிமையிலிரு

[8-ம் பக்கம் பார்க்க]

## ● திருகோணமலையில் பதற்றம் தணியவில்லை!

# ஊரடங்கு தளர்த்தப்பட்டும் வன்செயல்கள் நீடிக்கின்றன!

### மாண்டவர் தொகை பத்தாக அதிகரிப்பு

(திருகோணமலை நிருபர் வி. வி. சுந்தரம்)

திருகோணமலையிலுள்ள பன்குளம் எனும் இடத்தில் குடும்பமொன்றின் மீது நள்ளிரவில் நடந்த துப்பாக்கிப்பிரயோகத்தில் நாற்பது வயதுக் குடும்பத்தலைவரும், அவரது ஒன்றரை வயதுப் பெண்குழந்தையும் கொலையுண்டார்கள்! இளம்மனைவி ஆபத்தானநிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுதவிர நேற்று இருவர் வாள் வெட்டினால் மரணமானார்கள். காயமடைந்த பதினைந்து பேர் நேற்றுத் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். நேற்றுடன் மாண்டவர் தொகை பத்தாக அதிகரித்துள்ளது.

அபயபுரம் என்னுமிடத்தில் இளைஞர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கு மரணமானார்.

வாள்வெட்டும், துப்பாக்கிச் சூடும், தீவைப்புக்களும் தொடர்ந்து நடந்திருக்கின்றன.

**வாள்வெட்டுக்கு பலியானார்**

திருகோணமலை கோணேஸ்வரர் கோவிலில் கணக்குப்பிள்ளை எஸ். செல்வராஜா (38 வயது) நேற்றுப்பகல் வாள்வெட்டுக்கு இலக்காகி, ஸ்தலத்திலேயே மரணமானார்.

தொடர்ச்சியான ஊரடங்கினால், கோவிலில் தங்கி இருந்த அவர், பாலையூற்றிலுள்ள தனது வீடுநோக்கிச் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது பகல் பதினொருமணியளவில் வழிமறிக்கப்பட்டு வாளால் வெட்டப்பட்டதாகவும், ஸ்தலத்திலேயே பலியானதாகவும் தெரிவிக்கப்பட்

(8-ம் பக்கம் பார்க்க)

### கவாஸ்கர் ஆசிரியரானார்!

(பம்பாய்)

கல்கத்தாவிலிருந்து வெளியாகும் 'இந்தியன் கிரிக்கட்டர்' சஞ்சிகையின் ஆசிரியராக கவாஸ்கர் பதவியேற்றுள்ளார். இச்சஞ்சிகை மாதம் ஒருமுறை வெளியாகின்றது.

திருகோணமலையில் நேற்று

### சைக்கிள் நடமாட்டம் சில வீதிகளில் தடை

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்றுக் காலை எட்டு மணிமுதல், பகல் இரண்டு மணிவரை ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டிருந்த நேரத்தில், நகரத்திலுள்ள சில வீதிகளில் சைக்கிள்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஏகாம்பரம் வீதி, பிரதான வீதி, மத்திய வீதி ஆகியவற்றில் இந்தத் தடையை பொலிசார் அமுல்படுத்தினார்கள்.

65 மணிநேர ஊரடங்கின் பின்னர் கிடைத்த இடைவேளையில் ஜனநடமாட்டம் அவ்வளவாக இருக்கவில்லை என்று நமது நிருபர் அறிவிக்கிறார்.

சில கடைகள் திறக்கப்பட்டிருந்தன; மிகுந்த பதற்றத்துடனேயே பொதுமக்கள் வீதிகளில் காணப்பட்டனர்!

திருமலையில் பல்வேறு ஏ எஸ் பிக்கள் இப்போது தற்காலிகமாகக் கடமைபுரிகிறார்கள்! பகலில் பொலிஸ் அதிபர் ஒருவர் பொறுப்பாக இருக்கிறார்; இரவில் ஒரு பொலிஸ் அதிபர் பொறுப்பாக இருக்கிறார். பகலுக்குபொலிஸ் அதிபர் ஜெயதிலக்க ஹேரத்தும், இரவுக்கு பொறுப்பாக திரு தர்மதாசசில்வாவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

### உயர்மட்டக்குழு வரவில்லை

(யாழ்ப்பாணம்)

வடபகுதி பாதுகாப்பு தொடர்பாக ஆராய்வதற்கு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய இருந்த உயர்மட்டக்குழு நேற்று வந்து சேரவில்லை.

பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளுக்காக வடபகுதிக்கென தனிப் பொலிஸ் கமாண்டோ பிரிவு அமைப்பது சம்பந்தமாக உயர்மட்டக்

(8-ம் பக்கம் பார்க்க)

### ஐ. தே. க. உறுப்பினரும் பதவி விலகினார்!

(புலோலி)

பருத்தித்துறை நகரசபையின் ஐ.தே.க. உறுப்பினர் திரு. வி. சிவயோகநாதன் தமது உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

ஐ. தே. கவுக்கு இங்கு இரு உறுப்பினர்கள் இருந்தபோதிலும் மற்றவர் வேறு இடத்தில் வசிப்பதால் அவர்நிலைமை தெரியவில்லை. ராஜினாமாசெய்துள்ள சிவயோகநாதன் தமது பதவி விலகல் கடிதத்தின் நகல்களை தேர்தல் உதவிஆணையாளர், ஐ. தே. க. பொதுச் செயலாளர் அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

இவரைத்தேடி நேற்றுமுன்

[8ம் பக்கம் பார்க்க]

### யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இன்று விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பார்கள்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் நடக்கும் வன்செயல்களைக் கண்டிக்குமுகமாக இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கவுள்ளார்கள். பல்கலைக்கழக மாணவர் அவை நேற்றுக்கூடி இந்த முடிவை எடுத்தது.

இது தொடர்பாகச்சகல பாடசாலை மாணவர்களையும், வர்த்தக நிறுவன ஊழியர்களையும், ஏனைய கூட்டுத்தாபன ஊழியர்களையும் ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

இதேநேரத்தில் பல்கலைக்கழக வளவினுள் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு மாணவர்கள் தொடர்ந்தும் தமது துக்கத்தைத் தெரிவித்து வருகின்றனர். ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு இச்செயல்களைக் கண்டித்தும், தூதுவராலயங்கள், ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு இது தொடர்பான கண்டனத்தை அரசுக்குத் தெரிவிக்கும்படியும் தந்திகள் அனுப்பப்பட்டுள்ளன

[8-ம் பக்கம் பார்க்க]

85 AUG. A/L விஞ்ஞானம்
2ம் பிரிவு

நாளை ஆரம்பமாகின்றது.

MASTER
INSTITUTES
B. M. C. லேன், யாழ்ப்பாணம்

[7730]

மானிப்பாய் இந்துக்கல்லூரி
"நாடகவிழா"

யூலை 1, 2-ம் திகதிகளில் (இன்றும் நாளையும்) நடைபெறவிருந்த நாடகவிழா யூலை 2ம், 3ம் திகதிகளில் மாலை 6-00மணிக்கு நடைபெறும். கல்லூரி ஸ்தாபகர் தினமும் இல்ல விளையாட்டுப்போட்டியும் யூலை 4ம் திகதி நடைபெறும். 2:வருடாந்தப் பொதுக்கூட்டமும், மதியபோசனமும் 9-7-83-ல் நடைபெறும்.

பழைய மாணவர் சங்கம்
மானிப்பாய் இந்துக்கல்லூரி.

7805

# சரி விளம்பரம்

## விற்பனைக்கு

இயக்கச்சி, மாசார் பகுதியில் 34 ஏக்கர் காயக்கும் தென்னந் தோட்டம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். நடராசா, 51, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 7748

பண்டத்தரிப்பு, மடலி படைப்பு அரசடி வீதியில் காலையடிசந்தியிலுள்ள 2 பரப்பு காணியும், பலசரக்கு கடை ஒன்றும், அத்துடன் தொடர்ந்து கட்டப்பட்டிருக்கும் மின் போடக்கூடிய கட்டிடமும் விற்பனைக்கு உண்டு. காணியின் பக்கத்தில் மின்சார ரான்ஸ்போமர் போடப்படுகின்றது. முழுவிபரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி "யூஜினி மில், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு. 7769

திருநெல்வேலி அரசடி ஒழுங்கையில் 2 பரப்புக் காணியும் அத்தியடி புதுவீதியில் 2 பரப்புக்காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு மகிரி செமிஸ், தடன்லப் ஸ்ரோஸ் 234/446, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி, 23541 7771

யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதி 22/1-ம் இலக்கத்தில் ½ பரப்பு காணி வீட்டுடன் தண்ணீர் வசதியுடன் விற்பனைக்குண்டு. விலை விபரங்களுக்கு வை. கிருஷ்ணசாமி, 8/3. பெருமாள் கோவிலடி மேற்கு வீதி, யாழ்ப்பாணம். (7784)

சகல வேலைகளும் செய்யக்கூடிய லாரேஸ் இயந்திரம் விற்பனைக்குண்டு. விபரம் கிறீ கிருஷ்ண விலாஸ், (ஸ்ரேசன் முன்பாக), கண்டி றோட், கொடிகாமம். (7781)

சியூற்றிக்குத் தேவையான வாகு மேசைகள் விற்பனைக்குண்டு இம்மாதம் 1-ம், 2-ம் திகதிகளில் தொடர்பு கொள்ளவும். த. விநாயகமூர்த்தி, 32/4, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (7793)

நாச்சிமார் கோவிலடியில் 1½ பரப்புக் காணி தலையாழி ஒழுங்கையில் விற்பனைக்குண்டு. நல்ல சுற்றுடன். 1-ம், 2-ம் திகதிகளில் நேரில் தொடர்பு கொள்ளவும். த. விநாயகமூர்த்தி, 15/10, நாச்சிமார் கோவில் வீதி, தலையாழி, யாழ்ப்பாணம் [7792]

## பகிரங்க ஏல விற்பனை
### எவெய்றித் தராசு 10 அந்தர்

வலிகிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். அச்சுவேலி தலைமைக் காரியாலயத்தில் வைத்து தனது சொந்தப் பாவிப்பிலுள்ள எவெய்றி மேடைத்தராசு 10 அந்தர் ஒன்றை 20-7-83-ந் திகதி முற்பகல் 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யும். ஆகக்கூடிய கேள்விக்காரருக்கு விற்பனை செய்வதுடன் பணம் முழுவதையும் உடனடியாகச் செலுத்தி பொருளை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

விபரம்: ஒரு எவெய்றி மேடைத்தராசு 10 அந்தர், மேக் இல. இங்கிலாந்து 5535009

இங்ஙனம்
பொது முகாமையாளர். [7794]

## வாடகைக்கு

சகல வசதிகளுடனும் மேல் வீடு யாழ்ப்பாணம் 2-ம் குறுக்குத்தெருவில் உண்டு. தொடர்பு ந. சற்குணநாதன், சட்டத்தரணி, 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (7758)

## தேவை

Cane Palmpots உடன் தேவை. வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். 8, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (7795)

## குத்தகைக்கு

யாழ் நகர் கண்டிவீதியில் கச்சேரிக்கு அருகாமையில் 1000 சதுர அடி கொண்ட மூன்று கடைகள் குத்தகைக்கு உண்டு. தொடர்பு கொள்க. த. சி. தம்பித்துரை அன் சன்ஸ், 226 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24088 7765

## சேவை

இளம் மினிபோட்டோ ஆல்பம் ஒன்றை பெற உங்கள் கலர் பிலிம் சுருள்களை கொழும்பு ஸ்ருடியோவில் Processing - Printing செய்து கொள்ளுங்கள். 7480

## வகுப்புகள்

Scientific Cutting, Hair Styles, கேக் ஐசிங் ஆகியவற்றிற்கு செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. வகுப்பு நேரங்களில் தொடர்பு கொள்ளவும். The Ladies Academy, இல. 27, மின்சார நிலைய வீதி, 3-வது ஒழுங்கை, யாழ்ப்பாணம். 7601

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காங்கேசன்துறையைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை திருநாவுக்கரசு என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் தாமோதரம்பிள்ளை திருநாவுக்கரசு மைத்துனி கமலைகள் - கல்லூரி வீதி, காங்கேசன்துறை

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்
இல. 154

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு ஆடி மாதம் 6ஆந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி

ஆ. சிவபாதசுந்தரம்
பதிவாளர்

1983ம் ஆண்டு சித்திரை மாதம் 19 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
என்னால் வரையப்பட்டது.

செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி
7760

# றெட்றிக்கோ மைதானம் நவீனமயப்படுத்தப்படும்!
## கிளிநொச்சி எம். பி. நடவடிக்கை

கிளிநொச்சி நிருபர்) கிளிநொச்சிப்பகுதியில் விளையாட்டுத்துறைக்கு புத்தூக்கமளிக்குமுகமாக பழம்பெரும் விளையாட்டு மைதானமான றெட்றிக்கோ விளையாட்டரங்கை நவீனமயப்படுத்தி அபிவிருத்திசெய்ய முயற்சிகள் மேற்கொள்வேன் என்று கிளிநொச்சி அருணோதயா விளையாட்டு கழகத்தினர் நடத்திய 20 ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பரிசளிப்பு

(5ம் பக்கம் பார்க்க)

# விண்ணப்ப அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

மலேயா செலந்கோர் கிளாங் என்னும் இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தவனம் தம்பையா பொன்னம்மா என்பவரின் மரணசாதனத்தின் பேரில் கோலாலம்பூரில் இருக்கும் மலேயா மேல் நீதிமன்றத்தால் 12-10-1982ல் வழங்கப்பட்ட மரணசாதன அதிகாரப் பத்திரத்தை இலச்சினையிடுவதற்கான விண்ணப்பத்தின் பேரில்

மலேசியா செலங்கோர் கபிலேவ் லே ஜலான் எஸ் எஸ். 1/12, 2ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் கந்தவனம் தம்பையா என்பவர் தனது அற்றோணி தத்துவகாரன் சண்டிலிப்பாய் தொட்டிலடி கே. பாலேந்திரா மூலம்

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்
இல. 159

இவ்விண்ணப்பம் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பின் மேற்குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தின் பேரில் கோலாலம்பூரில் இருக்கும் மலேசியா மேல் நீதிமன்றத்தால் 12-10-1982ல் வழங்கப்பட்டுள்ள மரணசாதன அதிகாரப் பத்திரம் 1977ம் ஆண்டின் 20ம் இலக்க குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் 554 (யு)ம் பிரிவின் கீழ் இந்நீதிமன்றத்தால் இலச்சினை இடப்படுவதற்காக ஓர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1983ம் ஆண்டு ஆனி மாதம் 8ந் திகதி

ஆ. வ. சதாசிவம்,
மனுதாரின் சட்டத்தரணி.

7693


அன்பளிப்பு
பவானி கச்சான்
கொம்பனி
நீராவியடி,
யாழ்ப்பாணம்

3-7-83
வீரசிங்கம் மண்டபத்தில்
ஷோபா கிரியேஷன்ஸ்
வழங்கும்
இலங்கை
வேந்தன்
குழுவினரின்



தூக்கு மேடை

(7787)



வெளிநாடு செல்கிறீர்களா?
உங்கள் விமான பயணச் சீட்டுக்களை
எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே
பெற்றுக்கொள்ளுங்கள்.
விபரங்கட்கு:-
TFC
த பிறவுன்ஸ் கம்பனி
லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23680



யசோ - திடீர் - சோயா
அவல்
(பதனிடப்பட்ட பருப்பு)

இருதய வியாதி
இரத்த அழுத்த வியாதி
நீரிழிவு வியாதி
தோல் வியாதி

- கொலஸ்ட்றேல் இல்லாதது
- லெசித்தீனும்/கொழுப்புச்சத்தும்
புரதச் சத்தும் அடங்கியது.

இவைகளுக்குச் சிறந்த மாற்று உணவு என வைத்திய கலாநிதிகளால் சிபாரிசு செய்யப்படுவது.

பருப்பு வகைகளுக்குப் பதிலாகப் பாவிக்கலாம்.

அனைத்து வகையான கறிகள், குழம்புகள், சாம்பார்கள், சொதி, ரசம், சம்பல், பச்சடி, கஞ்சி, கூழ், கொழுக்கட்டை, மோதகம் இப்படியான சகலவகை உணவுப்பண்டங்களுடனும் சேர்க்கலாம்.

அப்படியே சாப்பிடலாம், பொரிக்கலாம், வறுக்கலாம், பொரிகடலை செய்யலாம், கொதிக்கும் பாலில் மோட்டுச் சீனியும் சேர்த்துப் பருகலாம்.

கிடைக்கும் இடங்கள் :

யசோ ஊட்டமிகு உணவு உற்பத்திகள் 362, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
மனோகரா தியேட்டர் முன்பாக அமைந்துள்ளது.

"பீஸ் மாட்ஸ்" 155, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
பஸ்நிலையம் முன்பாக்

யசோ யசோ யசோ யசோ யசோ யசோ யசோ யசோ யசோ 7791

### லெபனுன் கிழக்குப்பகுதியில்

# அரபாத் ஆதரவாளர்களுக்கும்

## எதிரிகளுக்குமிடையே கடும் மோதல்!

பெய்ரூட் ஜூன் 30

லெபனுனின் கிழக்குப்பகுதியில் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தலைவர் ஜனுப். யசீர் அரபாத்தின் ஆதரவாளர்களுக்கும், எதிரிகளுக்கு மிடையே கடும் மோதல் இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்துடன் அரபாத்திற்கு எதிரான கெரில்லா இயக்கத்தின் தலைவர் மேற்கொண்ட சமரச முயற்சி தோல்வியடைந்ததை யடுத்தே இம் மோதல் ஏற்பட்டது.

அரபாத் ஆதரவாளர்களின் இராணுவத்தளங்கள் கெரில்லாக்களினால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்தே இருதரப் புபடைகளும் கடும் மோதலில் ஈடுபட்டுள்ளன.

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தில் கூட்டுத்தலைமைப்பீடம் உருவாக்கப்பட வேண்டுமென்றும், இஸ்ரேலுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்தப்படவேண்டுமென்றும் கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நெருக்கடி நிலை குறித்து பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் உயர்மட்டத்தலைவர்கள் ரியூனீசியாவில் கூடி ஆராயவுள்ளனர். அதேவேளை மத்திய கிழக்கிற்கான அமெரிக்காவின் விசேட தூதுவர் திரு. பிலிப் ஹபீப் லெபனுவிருந்து வெளிநாட்டுத் துருப்புக்களை வெளியேற்றுவது தொடர்பாக லெபனுன் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். (வெ)

## ஆழிக்குமரன் ஆனந்தன் சாதனை முறியடிப்பு

சென்னை, ஜூன் 30

வட ஆற்காட்டைச் சேர்ந்த திரு. சண்முகம் தண்ணீரில் 81 மணி 25 நிமிடம் தொடர்ந்திருந்து புதிய உலக சாதனை யொன்றை நிலைநாட்டியுள்ளார்.

சென்னையிலுள்ள அண்ணா நீச்சல் தடாகத்திலேயே இவரின் இச்சாதனை இடம்பெற்றது.

இதன்மூலம் இவர் இலங்கையைச் சேர்ந்த ஆழிக்குமரன் ஆனந்தனின் உலக சாதனையை முறியடித்துள்ளார்.

ஆழிக்குமரன் ஆனந்தன் சென்னையிலுள்ள அண்ணா நீச்சல் தடாகத்தில் தொடர்ச்சியாக 80 மணித்தியாலம் தண்ணீரிலிருந்து புதிய உலக சாதனையொன்றை நிலைநாட்டியிருந்தது தெரிந்ததே (வெ)

## தடையுத்தரவு

சென்னை ஜூன் 30

சென்னை நகரில் ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள், ஊர்வலங்களை நடத்துவதற்கு 10 நாட்களுக்குத் தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளது. (வெ)

### குஜராத் மாநிலத்தின்

## நிவாரணப் பணிகளுக்கு ரூ. 10 கோடி ஒதுக்கீடு

புதுடில்லி ஜூன் 30

குஜராத் மாநிலத்தில் வெள்ள நிவாரணப்பணிகளைக் கள மேற்கொள்வதற்காக மத்திய அரசு 10 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

சேதமடைந்த பகுதிகளுக்கு அரசாங்க ஊழியர்கள் ஹெலிகொப்டர்கள் மூலம் சென்றுள்ளனர். இவர்கள் அங்கு சேதம் பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்வதுடன் மக்களுக்கு உதவும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவார்கள்.

குஜராத் மாநிலத்திலுள்ள 50 கிராமங்களுடன் தொடர்பு கொள்ள முடியாதிருப்பதாகவும் மத்திய அரசாங்கத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (வெ)

## பஸ் விபத்து 11 பேர் பலி

ஸ்ரீநகர், ஜூன் 30

ஜம்முகாஷ்மீரில் இடம்பெற்ற பஸ் விபத்தொன்றில் 11 பேர் பலியானதாகவும், 19 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

பஸ் வீதியைவிட்டு விலகிய போதே இவ்விபத்து இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. (வெ)

### கௌதமாலாவில்

## மக்களின் குடியியல் உரிமை இடைநிறுத்தம்

லண்டன் ஜூன் 30

கௌதமாலா இராணுவ அரசாங்கம் மக்களின் குடியியல் உரிமைகளை இடைநிறுத்தி வைத்துள்ளது.

கௌதமாலாவில் கூட்டம் கூடுதல், பேச்சுச்சுதந்திரம், செய்தித்துறை ஆகியவற்றிற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பிடிவிறாந்து இல்லாமல் எவரையும் கைது செய்ய படைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

கௌதமாலா ஜனாதிபதிக்கு எதிராகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டமையினாலேயே அந்நாட்டு இராணுவ அரசாங்கம் இத்தகைய நடவடிக்கை எடுத்துள்ளது. (வெ)

## சஞ்சீவரெட்டியை எம். ஜி. ஆர். பார்வையிட்டார்

சென்னை, ஜூன் 30

சென்னையிலுள்ள தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவரும் இந்திய முன்னாள் ஜனாதிபதி திரு நீலம் சஞ்சீவரெட்டியை தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி ராமச்சந்திரன் சென்று பார்வையிட்டு உடல்நிலைபற்றி விசாரித்தார்.

நீலம் சஞ்சீவரெட்டி விரைவில் குணமடையவேண்டும் என்று வாழ்த்தி பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அவருக்குச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார். (வெ)

### ''பாகிஸ்தானுக்கு

# அமெரிக்க ஆயுதங்கள் இந்தியஉறவில்பாதிப்பில்லை''

## அமெ. வெளிநாட்டமைச்சர் கூறுகிறார்

புதுடில்லி ஜூன் 30

''பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்குவதினால் இந்திய - அமெரிக்க உறவில் பாதிப்பு ஏற்படமாட்டாது.''

இவ்வாறு இந்தியாவிற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. ஜோர்ஜ் ஷீல்ஸ் புதுடில்லியில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில்,

''அணிசேரா இயக்கத்தின் தலைவி என்ற முறையில் இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் ஆப்கானிஸ்தான் பிரச்னை மத்திய கிழக்குப் பிரச்னை உட்பட பல்வேறு சர்வதேச விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடவுள்ளேன்'' என்று கூறினார்.

இந்திய ராஷ்டிரபதி திரு. ஜெயில் சிங்கையும் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் சந்திக்கவுள்ளார். நேற்று இவர் இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்ம ராவ்வைச்சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்துக்கலந்துரையாடினார். (வெ)

### திருமலை வன்செயல்கள்:

## யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் நடைபெறும் வன்செயல்களுக்கு யாழ். பல்கலைக் கழக மாணவர் அவை கண்டனம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் நடக்கும் வன்செயல்களால் அகதிகளாக்கப்படும் அப்பாவித் தமிழ் மக்களின் நிலை குறித்து நேற்றுக்காலை யாழ் பல்கலைக்கழக மாணவரவைத் தலைவர் திரு வ. சு. சிறீஸ்கந்தராசா தலைமையில்கூடி ஆராய்ந்தது.

இச்சம்பவங்கள் தமிழினத்தைத் தனக்கென்ற மண்ணில் இருந்து விரட்டியடிக்கும் சதி முயற்சியாக இருக்கிறதென்றும் இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இப்படியான பதட்டநிலையில் பல்கலைக்கழக மாணவர்களின் பரீட்சையை எவ்வாறு நடத்துவது என்பது குறித்தும் மாணவர் அவை ஆராய்ந்து வருகின்றது. (மா)

## யாழ். ஆஸ்பத்திரியில் 72 ஊழியர் நிரந்தரம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் அமைய ஆண் பெண் சிற்றூழியர்கள் 72பேர் நிரந்தர ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

77-ம் ஆண்டிலிருந்து இந்த 72 அமைய ஊழியர்கள் பல சிரம கஷ்டங்களுக்குள்ளாகி வந்தனர். ஜூலை முதலாம் திகதி தொடக்கம் இவ்வூழியர்கள் நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர்.

மேலும் யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளிலும் நிலவும் சிற்றூழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அமைய ஆண், பெண் ஊழியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை, நேற்று யாழ் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. (மா)

### ✯ யாழ். பொது நூல் நிலையத்தில்

## இரவல்கொடுக்கும் பகுதி ஜூலை 14-ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூல் நிலையத்தில் புத்தகங்களை இரவல் கொடுக்கும் பகுதி எதிர்வரும் ஜூலை 14-ம் திகதி வியாழக்கிழமை முதல் இயங்கவும் செயற்பட ஆரம்பிக்குமென யாழ் மாநகர ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இரவல் கொடுக்கும் பகுதியின் உபயோகத்துக்கென தயாரிக்கப்பட்ட புத்தக இருக்கைகள் போன்ற தளபாடங்களைக் கடந்த ஜூன் 23-ம் திகதி நூல் நிலையப் புத்தகத் தெரிவுக்குழுவின் தலைவர் வண. பிதா பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளார் மற்றும் உறுப்பினர் நேசையாவும் தாமும் சென்று பார்வையிட்டதாகவும் தளபாடங்கள் இவற்றில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்ற முடிவுக்கமைய அவை இப்போது திருத்தவேலைகள் செய்யப்பட்டுவருவதாகவும் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டிருக்கின்றார். (சு)

## கந்தர்மடம் புனர்வாழ்வுநிதி

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அகதிகளின் புனர்வாழ்வுக்காக யாழ். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்டச் செயலாளருமான திரு தேவநேசன் நேசையாவினால் ஆரம்பிக்கப்பட்ட அகதிகள் புனர்வாழ்வு நிதிக்கு இதுவரை 14,375 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கன்னியாஸ்திரிகள் மடம் ரூ 10,000 ஏழாலை சூராவத்தை சிறிவில்லு தேவாலய குரு வண. பரிஸ்பிறிஸ் ரூ 2 5000 சுழிபுரம் பாரதி கலை மன்றம் ரூ 1,675 வண எவ் எல்.சி. தைற் ரூ 100 எஸ். பொன்னுத்துரை ரூ 100

இவர்கள் ஐந்து பேரும் யாழ் அரசாங்க அதிபரிடம் நேரில் சென்று மேற்குறிப்பிட்ட நிதியை கையளித்தனர். (மா)

## 12 சார்ஜண்டுகள் மட்டுமே சித்தி

[கண்டி/சூளி]

காவல் திணைக்களத்தில் பரிசோதகர் (இன்ஸ்பெக்டர்) தரத்துக்கு உயர்த்தப்படுவதற்கு நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் பன்னிரண்டு சார்ஜண்டுகள் மட்டுமே சித்திபெற்றுள்ளனர்.

சித்தியடைந்த பன்னிரண்டு பேரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு எட்டுப்பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் ஒரு முஸ்லீமும், ஒரு தமிழருமாவர். அவர்கள் பின்வருமாறு: ஜனுப் ரீ. எம். காதர், (கொழும்பு) திரு. எம். ஏ. ஆர். செல்வநாயகம் (யாழ்ப்பாணம்).

தெரிவு செய்யப்பட்டவர்கள் இம்மாதம் பதினேழாம் திகதி முதல் இன்ஸ்பெக்டர்களாகப் பதவியுயர்த்தப்பட்டனர்.

## இந்திய கிரிக்கெட் அணிக்கு நிதியுதவி

புதுடில்லி, ஜூன் 30

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்ற இந்திய கிரிக்கெட் அணியின் வீரர்களுக்கு நிதியுதவியளிக்கும் பொருட்டு புதுடில்லியில் கலைநிகழ்ச்சியொன்றை நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்துள்ளது.

இந்த கலைநிகழ்ச்சிமூலம் 20 லட்சம் ரூபாவைத் திரட்டுவது முடிவுசெய்துள்ளது [வெ]

மணிவாக்கு

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு

— குறள்

# நமது நோக்கு

## நரிவாலைக் கொண்டு கடல் ஆழம் பார்க்காதீர்!

திருமலையில் நேற்று 65 மணிநேர ஊரடங்கு தளர்த்தப்பட்டபோது நிலைமை எவ்வாறோ என்பதே எமது விசனம்.

இதனை எழுதும்போது அக்கவலையே மேலிட்டிருப்பதால் அங்கு அமைதியை நிலைநாட்ட நாட்டின் நல்ல சக்திகள் அனைத்தும் திரள வேண்டுமென்ற பிரார்த்தனை முதலிடம் பெறுகின்றது.

ஒருசிறு தீக்குச்சி ஒரு பெருமாளிகையை எரித்து விடமுடியும்; இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் எவ்விதத்திலும் எரிக்கமுடியாத கட்டிடங்களை எழுப்ப முடியுமாயினும் அதனை முறியடிக்கும் ஆற்றல் மனித மூளைக்கு அப்பாற்பட்டதல்ல.

எனவே அறிவின் திறமையால் முன்னேறும் உலகம் அதன் திறமையாலேயே அழியும் தறுவாயில் உள்ளது.

இந்த மூல உண்மையை உணராது வாணைபார்த்த குருடரைப்போல் ரோமாபுரி எரியும்போது வீணை வாசித்த நீரோமன்னனைப் போல் மாநாடு கூட்டுவதும் அறிக்கை விடுவதும் எரியும் நெருப்புக்கு எவ்விதத்திலும் உதவுவதாயில்லை.

நாம் ஒருதலைப்பட்ட விளக்கம் கொடுப்பது இவ்வித பயங்கர விடயத்தில் ஆபத்தென நன்கறிவோம்.

அதேசமயம் எமது நிருபரின் செய்தியும் ராணுவத்துக்கு ஜனாதிபதியின் பணிப்புரையும் திருகோணமலை ஒரு அவமிருத்து நிறைந்த சுடுகாடு என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

வரப்போவதை முன்னதாகவே அறிந்து அதனின்றும் மக்களைக் காத்துக்கொள்ளும் சக்தியில்லாத ஆட்சி அங்கு நடைபெறுவதை அரசாங்கம் பார்த்துக்கொண்டிருப்பது வியப்பிலும் வியப்பு.

என்ன நேரிடினும் அங்கு அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், ஒருங்காகவும் கூட்டம் கூட்டமாகவும் அப்போர்க்களத்தை நேரில் பார்வையிட்டு அமைதி நிலவ உடனடி நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இக்கறைக் கறையைப் பெறுதல் வேண்டும். [illegible]

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மிக ஆதரவாய், அமைதியாய், வாழவேண்டும்; வாழ்கின்றனர் என்று நாமெல்லோரும் இன்புற அரச அதிபர் (முன்னாள்) திரு. லயனல் பெர்னாண்டோ செயற்படுத்திய ஆக்கபூர்வமான திட்டங்களை அண்மையில் பாராட்டினோம்.

ஆனால் இன்று கொழுந்துவிட்டெரியும் தீயினை, கொந்தளிப்பாய் நாட்டுக்கு சர்வதேச வெறுப்பைத் தேடும் கோர, பரிதாபக் கொலைகளை, வெறியாட்டங்களை உடனடியாக நிற்பாட்ட அனைவரும் ஒற்றுமைப்படுவோம்.

எங்கள் பிரிவினைகளை ஊருக்கும் உலகுக்கும் விளம்பரம் செய்வதில் இன்பம் காண்டலை தற்காலிகமாவது நிறுத்தி, பிளவுகளைப் பெரிதுபடுத்தாமல், திருமலையில் சமாதானம், சாந்தம் அமைதி நிலை ஒரே குரல் எழுப்புவோம். நீதியில் நம்பிக்கைகொண்ட மக்கள் அனைவரும் ஒன்று திரள்க!

திருமலை எம்.பி. சம்பந்தன் தனியே நின்று தன் நம்பிக்கையுடனும் அரசியல் விவேகத்துடனும் நிலைமையைச் சமாளிக்கும் சரிதை திரைப்படமாக வேண்டும்.

தமிழ் மக்கள் பெயரில் மட்டுமல்ல, நாட்டின் நற்பிரஜைகள் அனைவர் பேரிலும் நாம் மீண்டும் வற்புறுத்துவது!

அனுபவமுள்ள புதைபொருள் ஆராய்ச்சி, பொருளாதார, சமுதாய ஆராய்ச்சிகளில் பொழுதுபோக்கும் நேரம் இதுவல்ல,

எனவே பயங்கரவாதிகள் யார் என்றும், பயங்கரவாதத்தின் விளைவு எதுவென்றும்; இந்த அரசின் அபூர்வமான சாதனைகள் என்ன என்றும்; தமிழ் மக்களுக்கு — சமாதான வாழ்வில் நம்பிக்கை கொண்ட தமிழ் மக்களுக்கு — எது நலமென்றும், ஆழ்ந்த ஆராய்ச்சிகளுக்கு நேரம் இதுவல்ல. நரி வாலைக்கொண்டு கடல் ஆழம் பார்க்காதீர்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் செயற்திறத்தில் இன்னும் நம்பிக்கை கொண்ட மக்கள் திருமலையில் தொடரும் தீயை முற்றாய் அணைத்துவிடுவதில் வெற்றிகாண்பாரென நம்புகின்றனர்.

# உலக கிண்ணத்தை இந்தியா சுவீகரித்ததில் ஆச்சரியமில்லை!

## கிரிக்கெட்டில் அதற்கென்றோர் வரலாறு உண்டு!!

உலக கிரிக்கெட் கிண்ணத்தை இரண்டு தடவைகள் சுவீகரித்த மேற்கிந்திய அணியினருடன் இறுதியாட்டத்தில் மோதி உலக கிரிக்கெட் கிண்ணத்தை இந்தியா முதல் தடவையாக சொந்தமாக்கியது. 'கரிபியன் கிரிக்கெட் புலிகள்' என்று அழைக்கப்படும் மேற்கிந்திய வீரர்களின் ஆட்டத்தினை மிஞ்சும் வகையில் இந்திய வீரர்கள் சிறப்பாக விளையாடி வெற்றியைத் தட்டிக் கொண்டு விட்டார்கள்!

ஆனாலும் இந்தியாவின் வெற்றி ஆச்சரியப்படும் வெற்றியல்ல!

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இந்தியாவின் வெற்றி

## சுழல்பந்து வீசுவதில் சாதனை செய்த தமிழர்!

பெரும் வியப்பையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியிருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது!

ஒரு சாரார் இந்தியாவுக்கு கிடைத்த வரலாறு காணாத வெற்றியென்று வாயாரமனமார புகழவும், இன்னொரு பகுதியினரின் 'வயிற்றெரிச்சலை' கிளப்பி விடவும் இவ் வெற்றி வழி அமைத்துக்கொடுத்துள்ளது!

எவ்வாறாயினும் இந்திய வீரர்களின் திறமையை யாராலும் உணரா விட்டாலும், மேற்கிந்திய தீவுகளின் வீரர்கள் புகழ்ந்தும் பாராட்டியும் உள்ளார்கள். அது ஒன்றே போதுமானது.

### இந்தியாவுக்கு புதியதல்ல!

கிரிக்கெட் விளையாட்டு என்பது இந்தியாவுக்கு ஒன்றும் புதியதோ, அன்றி புதிரானதோ இல்லை. கிரிக்கெட் உலகின் தாயகமான இங்கிலாந்து தேசம், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு அடுத்ததாக இந்தியாவுடனேயே தனது உத்தியோகபூர்வ கிரிக்கெட் ஆட்டங்களைத் தொடக்கியிருந்தது. குறிப்பாக 'ரஞ்சித் சாபி' என்ற உள்நாட்டு ரீதியான கிரிக்கெட் போட்டியிலும், வெளிநாடுகளுடனான 'டெஸ்ட்' தொடர்களிலும் இந்தியா மிக ஆரம்பகாலம் தொட்டே விளையாடி வருகின்றது'

எந்த விடயத்தையும் எளிதில் கிரகிக்கும் தன்மை கொண்ட இந்தியர்களுக்கு கிரிக்கெட் மட்டும் விதிவிலக்காக அமைய முடியுமா? கிரிக்கெட் அரங்கில் ஏகாதிபத்தியத்தின் ஒரு விளையாட்டாக அமைந்த போதும், அதனை எளிதில் கற்றுத் தேர்ந்து உணர்ந்து திறம்பட விளையாடும் பல வீரர்கள் ஆரம்பகாலம் தொட்டே இந்தியாவில் இருந்து வந்திருக்கின்றார்கள்.

### பட்டோடியை மறக்கமுடியாது

இந்த வரிசையில் முக்கிய இடத்தினைப் பெறுபவர் பட்டோடி நவாப் ஆவார். ஒரு கண்ணை இழந்த இவர் இந்தியாவின் கிரிக்கெட் காப்டன்களில் தலைசிறந்தவர். 'ஆல்ரவுண்டரான' இவர் தடுப்பெடுத்தாடுவதிலும், பந்து வீசுவதிலும், பந்துகளை தடுப்பதிலும் சிறப்பாக விளையாடியவர்கள் அசோக் மன்கட், வினு மன்கட் என்பவர்கள். இவர்கள் பட்டோடிக்கு முன் இந்திய அணியை சிறப்பாக வளர்த்து வந்தவர்கள்.

பட்டோடியின் சமகாலத்தவரான "எஞ்சினியர்" இவர் ஒரு உலகப் பிரசித்திபெற்ற விக்கெட் கீப்பரும், தொடக்க ஆட்டக்காரருமாவார்! எஞ்சினியர் 'பட்ச்' செய்ய வருவார் என்றால் அதனை கிரிக்கெட் ரசிகர் கூட்டம் ஆவலோடு எதிர்பார்த்த காலமும் உண்டு அவர் ஆடினார் ரசிகர்களுக்கு ஒரே குஷிதான்.

இன்று உலக வெற்றிக் கிண்ணத்தை தம்வசமாக்கிய இந்திய அணிக்கு எஞ்சினியர் மனேஜராகச் சென்றது குறிப்பிடத்தக்கது.

### மற்றோருவர் வடேகர்

இந்திய கிரிக்கெட் அணியை பட்டோடிக்கு பின் சிறப்பாக வழிநடத்தியவர் கப்டன் வடேகர் விளையாட்டில் கடைப்பிடிக்க வேண்டிய சகல அம்சங்களை தெரிந்து கொண்டு தனக்கு பின்னால் சிறப்பாக வரக்கூடிய பல வாரிசுகளையும் உருவாக்கி விட்டவர்.

சிறந்த விளையாட்டு வீரனாக திகழ்ந்த இவர் ஒரு சமயம் இந்திய டெஸ்ட் போட்டி ஒன்றில் ஆக்குறைந்த 46 ஓட்டங்களை எடுத்தமையினைத் தொடர்ந்து அதற்கு தாமே முழுக்காரணம் என்கூறி கப்டன் பதவியிருந்து விலகி மற்றவர்களுக்கு வழிவிட்டுக்

ஏ. பி. சூரியகாந்தன்

சர்வதேச கிரிக்கெட் ரசிகர்களின் மனதில் நிலைத்து நின்றவர். ஒரு சமயம் நியூஸிலாந்துக்கு எதிராக டில்லியில் நடந்த டெஸ்ட் போட்டியில் 196 ஓட்டங்களை எடுத்த போது மிகுதியாக ஒரு பந்து மட்டுமே வீசுவதற்கு பாக்கியாக இருந்தது. அந்தப் பந்தினை சிறப்பாக அடித்து ஆடி 200 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் நின்று சாதனை புரிந்தவர்.

### ஆல்ரவுண்டர்

பட்டோடிக்கு முன்னர் விஜய் அசாரே, பொலிலு உம்பிறிகர் நாரி கொன்ட்ராக்டர் ஆகியோர் இந்தியாவின் தலைசிறந்த காப்டன்களாகத் திகழ்ந்தனர்! பொலிலும் உம்பிறிகர் ஒரு 'ஆல்ரவுண்டராக' இருந்து சாதனை பல புரிந்தவர். இவர்கள் வரிசையில் இன்னும் குறிப்பிடக் கூடிய

கொடுத்தவர்.

உலகத்துக்கு தலைசிறந்த சுழல் பந்து வீச்சாளர்களை வழங்கியதும் இந்தியாவே. பிசன்சிங்பேடி, வெங்கட்ராகவன், சந்திரசேகர், பிரசன்னா ஆகிய நால்வரும் ஏறக்குறைய ஒரே காலத்தவர்கள்.

சுழல் பந்து வீச்சில் பல புதிய நுணுக்க முறைகளைக் கையாண்டு உலக சிறந்த கிரிக்கெட் அணிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியவர்கள் கிரிக்கெட் உலகின் சுழல் பந்தின் 'மன்னர்கள்' என இவர்களைக் குறிப்பிடுவதும் உண்டு

இவர்களில் ஒருவரான பேடி' தான், வடேகர் பின் இந்திய அணியின் தலைவராவார் தமது காலத்தில் ஓரளவு சிறப்பாக அணியை கொண்டு நடத்தியபோதும் ஆங்காங்கே பல தோல்விகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. ஆனாலும் இந்திய கிரிக்கெட் பற்றி குறிப்பிடும்போது பேடி முக்கிய இடம்பெறுகின்றார்.

### தமிழர் காப்டன்

தமிழர் ஒருவர் கிரிக்கெட் அணியின் காப்டனாக இருந்த பெருமையைப் பெறுவர் வெங்கட்ராகவன், சிறந்த சுழல் பந்துகளை வீசுவதோடு, பந்துகளை திறமையாக தடுப்பதிலும் வல்லவராக இருந்தார். பல கோணங்களிலும் வீசும் இவரின் சுழல்பந்துக்கு ஏனைய நாட்டு சிறந்த ஆட்டக்காரர்கள் அதிக ஓட்டம் எடுப்பதில்லை. குறிப்பாக மேற்கிந்திய அணியினர் இவரைப் பொறுத்து தீவிர பாதுகாப்பு செய்து கொள்வார்கள்.

கிரிக்கெட் விளையாட்டில் பல உலக சாதனைகள் புரிந்த மேற்கிந்திய வீரரான லோயிட்ஸ் ஒரு தடவை விக்கட் பந்துக்கு அடுத்தடுத்து ஆட்டமிழந்தமைத் தொடர்ந்து நிருபர்களுக்கு அளித்த பேட்டி யொன்றில் இந்தியப் பந்து வீச்சாளர்களின் விக்கட் பந்தினை [illegible]

(5ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தின் இருபழம் தொழில்கள்

வீடமைப்புத் திட்டமென்றாலென்ன, சிறிய பெரிய கைத்தொழில்களென்றாலென்ன மனித மூலதனத்தைத் தக்கவாறு பயன்படுத்தினாலொழிய, வறுமை நாம் முன்னேறுதல் முயற்கொம்பு.

வீடமைப்பில் இலங்கை ஒரு உலக சாதனை அடையும் அறிகுறி உண்டு. பத்து லட்சம் வீட்டு திட்டம் காலவரையில் கைகூடுமென நம்ப இடமுண்டு.

இதன் முக்கியத்துவம் இளைஞர்கள் யுவதிகள் பயிற்சியாலும் கலையுயற்சியாலும் நல்ல வீடுகளை கூட்டுறவு முறையில் கட்ட முடிப்பதே.

தொழில்நுட்ப சாதனங்கள் இவ்வனமான உற்பத்தி முறைகளுக்கு உதவ மாட்டா என்ற அச்சம் தீர இன்று வந்திருக்கிறது; அதிலுடன் படித்த பயிற்சி பெற்ற இளைஞர்கள் இவ்வித தொழில்களில் ஆர்வம் கொண்டால் பெரும் ஊதியம் பெறுவதோடு, ஊரில் தன்னிறைவுக்கான நெறிகளை உதவுவர்கள்.

ஊழ்ப்பாணத்தில் பல கிராமங்களின் பண்டைக் கால வாழ்வு — சுமார் 60 வருடங்களுக்குமுன் — பனந்தும்புத்தொழிலிலும், சுருட்டு வேலையிலும் பெரிதும் தங்கியிருந்ததை இன்றைய வயோதிபர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

கிராமத்தின் முற்சந்திகளில் குறிக்கப்பட்ட நேரம் ஒரு விசில் (Whistle) சத்தம் கேட்டால் அது தபாற்காரன் அல்ல; தும்பு வாங்கும் ஏஜண்ட் என்பது நன்கறிந்த வரிசை.

பல வருடங்களாக பல குடும்பங்களுக்கு வாழ்வளித்த இக்குடிசைக் கைத்தொழிலுக்கு இன்று யாழ்ப்பாணத்தில் — பனை வளம் படைத்த பிரதேசத்தில் — புத்துயிர் அளிக்க வேண்டுமென்கிறார் தமிழக பனந்தொழில் நிபுணர் திரு சம்பந்தர்


ஜப்பான் போன்ற நாடுகளுக்கு பனந்தும்பு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு பெருகி வருவதைப் பயன்படுத்தி இங்குள்ள பனை தொ. க. சங்கம் மூலம் ஏற்றுமதி செய்யமுன்வரவேண்டுமென்று அவர் கேட்டிருக்கிறார்.

ஏற்றுமதிக்கும் தேவைப்படுவது பனந்தும்பு; அதற்கு தேவைப்படுவது பனையும் தும்படிக்கும் ஊழியர்களும்; கட்டடங்களும் கருத்தரங்குகளும் அல்ல

அதே போன்று யாழ்ப்பாணத்தின் சாயஜவுளி உள்ளூரில் மட்டுமல்ல, வெளியூர்களிலே — இந்தியா சிங்கப்பூர் மலேசியா நாடுகளில் பெரும் பெயர் பெற்றிருந்தது.

சாயவேட்டிகளும் சால்வைகளும் சேலைகளும், பலவித வர்ணப் புடைவைகளும் சாயத்தின் சிறப்பால் ஒரு பெருந் தொழிலாக வளர்ச்சி பெற்றிருந்தது; பின்பு மங்கி மறைந்தது.

அதற்கும் நல்ல காலம் பிறந்திருக்கிறது யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்துக்கு சாவகச்சேரியில் கோண்டாவில் சாயத் தொழில் நிலையம் துரிதமாக தொழிற்பட வேண்டும்.



ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக முதல் தடவையாக நடத்திய மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கட்போட்டி அண்மையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் சாம்பியனான சென்ரல்ஸ் அணிக்கு ஜொலிஸ்ரார்ஸ் சுற்றுக்கிண்ணம் பிரதம விருந்தினர் திரு. எஸ் வி அலுமைநாயகம் அவர்களால் வழங்கப்படுவதையும் அதனை சென்ரலைற்ஸ் அணியின் தலைவர் ஆர். நகுலேஸ்வரன் பெறுவதையும் அருகில் கழகத்தின் செயலாளர் திரு. பி. இந்திரசிறி நிற்பதையுக் படத்தில் காண்க.

# ‘பழமையை பேணி பாதுகாப்போம்!’

## மகாஜன பரிசளிப்புவிழாவில் பேச்சு

(மாவிட்டபுரம்)

“எமது நாட்டின் நல்ல கலை பண்புகளை மேலை நாட்டார் ரசித்துத் தமதாக்கிக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் கைவிடுகின்ற தீமை விளைவிக்கும் சில பழக்க வழக்கங்களை நாம் பின்பற்றுகிறோம் இது எமது தேசிய பாரம்பரியத்திற்கு ஊறு விளைவிப்பதாகும். ஆகவே நாம் பழமையைப் பேணிக் காப்பதுடன் புதுமையில் உள்ள நல்ல அம்சங்களையும் எமதாக்கிக்கொள்ளவேண்டும்”.

இவ்வாறு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பரிசளிப்பு விழா, நிறுவியவர் நினைவுநாள் விழா ஆகியவற்றுக்குத் தலைமைதாங்கி உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு. த. சண்முகசுந்தரம் கூறினார்.

கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:–

“எமது நாட்டுப் பண்பாட்டு வரலாறு மிகவும் பழமை வாய்ந்தது இந்தப் பண்பாட்டுக் கருவூலங்களைப் போற்றி வளர்த்து காலத்திற்குக் காலம் மெருகூட்டவேண்டியது நமது கடமை. இதில் கல்வி உலகோடு தொடர்புள்ள எமக்குப்பெரும் பங்கு உண்டு”. என்றார்.

யாழ். பல்கலைக்கழகக் கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. பொ. இரகுபதி நிறுவியவர் நினைவுப் பேருரை ஆற்றினார். (இ)

# “ஐ.தே.க. வுடன் தொடர்பில்லை”

(புலோலி)

“எமது சமூக மக்களின் அபிவிருத்தி கருதிச் செயற்பட்டு வந்தேனே தவிர எனக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எதுவித தொடர்புமில்லை நான் ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளனுமல்ல”

இவ்வாறு பருத்தித்துறை புலோலி தெங்குபனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு சிவப்பிரகாசம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

# சிறப்புச் சொற்பொழிவு

(சரவணை)

புங்குடுதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தில் சென்ற வெள்ளிக்கிழமை தமிழ்நாடு புலவர் இளஞ்சேரனார் இலம்பதிகாரம் என்ற விடயம்பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றினார். புங்குடுதீவு கண்ணகைபுர, சைவ இளைஞர் சங்க ஆதரவில் நடைபெற்ற விசேட கூட்டுப் பிரார்த்தனையின் போது இந் நிகழ்ச்சி இடம் பெற்றது திரு கே. நாகலிங்கம் தலைமை வகித்தார்.

## யாழ். நாகவிகாரைக்கருகில்

# இராணுவத்தினரால்கைதான இருஇளைஞர் றிமாண்டில்!

(யாழ்ப்பாணம்)

யாழ் நாகவிகாரைக்கருகில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் நேற்று ஆஜர்செய்யப்பட்டபோது, ஜூலை 11-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த சி. சுந்தரம் என்பவரும், கொழும்புத்துறையைச் சேர்ந்த அந்தோனிமுத்து ரவி என்பவருமே றிமாண்டில் வைக்கப்பட்ட சந்தேக நபர்களாவர்.

மாதகல் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர்களே மேற்படி இருவரையும் நாகவிகாரையடியில் வைத்து சந்தேகத்தின்பேரில் கைது செய்து, பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

இருவரும் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டனர். [மா]

# புதிய சமாதான நீதவான்

(சாவகச்சேரி)

மறவன்புலோ வள்ளக்குளம் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தாவும் ஓய்வு பெற்ற ஆசிரியரும் யாழ்ப்பாணம் ஸ்ரீசந்திர அச்சக உரிமையாளருமான திரு முருகேசு கணபதிப்பிள்ளை சாவகச்சேரி நீதிமன்ற வலயத்துக்கான புதிய சமாதான நீதிபதியாக சாவகச்சேரி நீதிமன்றத்தில் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார் இவர் பிரபல சமூக சமய சேவையாளர்.

‘கிங்ஸ்லி சுவாம்பிள்ளை நியமனம்

# யாழ் மறைமாவட்டம் பெருமிதப்படுகிறது!”

(புலோலி)

“ஏழு ஆயர்களை உருவாக்கித் திருச்சபைக்களித்த பெருமை யாழ். மறை மாவட்டத்திற்கு உண்டு. இப்பெருமை மிகு யாழ். மறைமாவட்டத்திலிருந்து திருமலை– மட்டுநகர் மாவட்டத்திற்குப் பேரருட் திரு. யோ. கிங்ஸ்லி சுவாம் பிள்ளை ஆண்டகை நியமிக்கப் பட்டமை கண்டு யாழ். மறை மாவட்டம் பெருமிதமடைகின்றது”

இவ்வாறு, திருமலை–மட்டு நகர் மறைமாவட்டத்தின் 5வது ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்டு யாழ். நகருக்கு வருகைதந்த ஆயர் பேரருட் திரு. யோ. கிங்ஸ்லிசுவாம் பிள்ளை ஆண்டகைக்கு யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தால் அளிக்கப்பட்ட வரவேற்பில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய சங்கப்பரிபாலகர் அருட்திரு. யோ. நீக்கிலஸ் அடிகளார் குறிப்பிட்டார்.

மறைக்கல்வி நிலையத்தில் திரண்டிருந்த ஆசிரியர்கள் ஆயருக்கு மலர்மாலைசூட்டி ஆலாத்தி எடுத்து மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். புதிய ஆயர் திருப்பலி ஒப்புக்கொடுத்தமையைத் தொடர்ந்து திரு. ஆர். யோசேப் தலைமையில் வரவேற்பு வைபவம் நடைபெற்றது. இசையரசம பேசுதாஸன் பாமாலை பாடிக்கையளித்தார்.

சங்கச்செயலாளர் திரு. கி. விக்சென்ற் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

யார் யாரை எப்பணிக்கு இறைவன் தெரிவுசெய்கிறார் என்பதை எம்மால் ஊகித்துக்கொள்ளமுடியாது. ஆனால் இறையருள் நிறைவேற்றும் அது எத்துணைப் பொருத்தமானதென்று நாம் ஆச்சரியமடைகின்றோம். இதுதான் இறைவன் திருவிளையாடல்.

ஆயர் பேரருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தமக்களிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றிதெரிவித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது!

மனிதனுக்குப் பிறந்தவன் இறைபணி செய்வதன்மூலமே திருப்தியும், பூரணமும் அடைகிறான் எவ்விடமானாலும் நாம் இறைபணி புரிய ஆயத்தமாக இருக்க வேண்டும் தமிழ் பேசும் கத்தோலிக்க மக்கள் இன்னல்கள் பல அனுபவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையிலே புதிய பொறுப்பு எனக்குச் சுமத்தப்பட்டுள்ளது நாம் ஒவ்வொருவரும் மனத் தூய்மையுடன் சிறப்பாகச் செயற்படவேண்டும்.

# யாழ். புனிதமரியாள் பாடசாலைக்குப் பாராட்டு

(சுண்டிக்குளி)

“இப்பாடசாலை விளையாட்டுப்போட்டிக்கு கல்வித்திணைக்கள ஊழியர், அதிகாரிகள் இருப்பதைக் கண்டேன். இப் பாடசாலையால் கல்வித்திணைக்களத்துக்கு நல்ல மதிப்பு என்பது தெளிவாகிறது. அதாவது சகல துறைகளிலும் இப்பாடசாலை முன்னிற்பது பாராட்டக்கூடியது. அதற்கு காரணம் இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் ஒற்றுமை, சேவை மனப்பான்மையே”

இவ்வாறு வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு எம் சிமியோன் பிள்ளை கூறினார்

யாழ். புனித மரியாள் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு அவர் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. வெ. வில்லியம் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் திரு சிமியோன்பிள்ளை மேலும் கூறியதாவது: “பாரிய கல்லூரிகளில் இல்லாத தரத்தை இவ்வித்தியாலயத்தில் கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்” இக்காலகட்டத்தில் நமது மாணவ சமுதாயத்துக்கு சிறப்பான கல்வியை அளிக்கவேண்டியது நம் கடமை” என்றார்.

யாழ் எம். பி. திரு வி. யோகேஸ்வரன் பேசுகையில், “நான் பாரளுமன்ற உறுப்பினராக வருமுன் சுமார் ஐந்நூறு பிள்ளைகள் இங்கு கல்வி கற்றனர் கடந்த ஏழு வருடங்களில் ஆயிரத்து முன்னூறு பிள்ளைகள் உள்ளனர். இது இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் கடமையுணர்ச்சியைக் காட்டுகிறது” என்றார்

திருமதி ஜே. சிமியோன்பிள்ளை பரிசில்கள் வழங்கினார். செல்லிரசா இல்லம் அதிக புள்ளிகள்பெற்று முதலாம் இடத்தைப்பெற்றுக்கொண்டது.

சயன்ஸ் அக்கடெமியின் கிளைநிறுவனமான
கஜூஸ் அக்கடெமியில்
84 - 85 A/L வர்த்தகப்பிரிவு
இன்று 01-07-83ல் ஆரம்பமாகின்றன
குறைந்த எண்ணிக்கை வெற்றிடமுண்டு
புவியியல் - கமலநாதன், வர்த்தகம் - செல்வநாயகம்
பொருளியல் - செல்வகுமார் கணக்கியல் - வில்வராஜா
அளவையியல் - மனோகரன்
கஜூஸ் அக்கடெமி
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

விசா இல்லாமல்
சிங்கப்பூர், லண்டன், கனடா, மலேசியா, கொங்கொங், சம்பியா அல்லது பாகாமா
ஆகிய நாடுகளுக்கு செல்ல
★ விமான டிக்கட்
★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்காசோலை வங்கியின் கட்டணத்தில்
★ விமான ஆசன பதிவுகள்
மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைக்கும் இன்றே நாடுங்கள்
மக்கினோன்
டிரவல்ஸ் லிமிட்டட்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
[ZAMBIAN AIRWAYS பிரதான விற்பனைப் பிரதிநிதி]
General Sales Agents
த. பெ. எண்: 92 போன்: 24154

வேலைக்குச் செல்லும் போது

# துப்பாக்கி முனையில் சைக்கிள் கொள்ளை

(பண்டத்தரிப்பு)

அதிகாலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு வேலைக்குச் சென்றுகொண்டிருந்த ஒருவரை வழி மறித்துத் துப்பாக்கி முனையில் அவரது சைக்கிளையும், கைக்கடிகாரத்தையும், இருபது ரூபாய் பணத்தையும் இனந்தெரியாத இருவர் கொள்ளையடித்துள்ளனர்.

இச்சம்பவம் வடலியடைப்பு சனசமூக நிலையத்திற்கு முன்னால் நடந்துள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிற்றூழியராக வேலைசெய்யும் நல்லையா சின்னத்துரை என்பவர் அதிகாலை வேலைக்குச் செல்லும்போது, 5-30க்கு தனது இடமான பனிப்புலத்திலிருந்து வரும்போது, குறிப்பிட்ட இடத்தில் இரண்டு இளைஞர்கள் துப்பாக்கியோடு வழி மறித்து அவரின் சைக்கிளையும் மற்றும் பொருட்களையும் பறித்தனராம்.

காங்கேசன்துறைப் பொலிஸில் இதுசம்பந்தமாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

# கன்பொல்லை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிமேற்கு கன்பொல்லை ராஜகிராமத்துக்கருகாமையில் ஏற்பட்ட தீவிபத்தால் பாதிக்கப்பட்ட 16 குடும்பங்களுக்கும் யாழ். மாவட்ட சமூகச்சேவைகள் திணைக்களம் நிவாரண நிதியாக தலா 350 ரூபா வழங்கவுள்ளது. இதன் முதல் கட்டமாக தலா 200 ரூபா இன்று வழங்கப்படும்.

குப்பிவிளக்கினால் ஒரு குடிசையில் ஏற்பட்டதீ, அடுத்தடுத்திருந்த குடிசைகளுக்கும் பரவியது. இதில் 12 குடிசைகள் ஒன்றாகவும் 4 குடிசைகள் சற்றுத்தொலைவிலும் இருந்தன. ஆயினும் 16 குடிசைகளும் தீயில் சாம்பராயின.

தீக்கிரையான குடிசைகளில் வாழ்ந்துவந்த 16 குடும்பங்கள் அன்றாடங்காய்ச்சிகளாவர். மிகவும் வறியவர்கள் இப்போது அவர்கள் உடுக்கத்துணியின்றி, வசிப்பதற்கு வீடின்றி நிர்க்கதியாகப் பாடசாலை ஒன்றில் தஞ்சமடைந்துள்ளனர்.

இப்பரிதாப சம்பவம் பற்றிச் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஐயாத்துரைக்கு அறிவித்ததும் அவர் உடனடியாக ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டு, யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவுக்கும் மாவட்ட சமூக சேவைத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. கே. செங்காதரனுக்கும் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து இவர்களிருவரும் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்றுபார்வையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்களுக்கு உடனடியாகச் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் உணவும் துணிவகைகளும் வழங்கப்பட்டன.

எரிந்த உடைமைகளின் சேதம் 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா என கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் மதிப்பீடு செய்துள்ளார். (மா. அ)

கொள்ளை முயற்சி தோல்வி

# மோட்டார் சைக்கிளை விட்டு கொள்ளையர் தப்பி ஓட்டம்!

(சுன்னாகம்)

கடை ஒன்றுக்குள் கொள்ளையடிக்கச் சென்ற இருவர், கடை உரிமையாளரின் தொண்டையை நெரித்த பொழுது அவர் அவலக்குரல் எழுப்பினாராம். அயலிலுள்ளவர்கள் அவ்விடத்துக்கு ஓடிவரவே கொள்ளையர்கள் தாங்கள் வந்த 10 ஸ்ரீ 9630 ஹொண்டா மோட்டார் சைக்கிளையும் விட்டுவிட்டு ஓடித்தப்பித்துக்கொண்டனர். கொள்ளை முயற்சி தோல்வியில் முடிந்தது.

மல்லாகம் புனையிரத்தலைப் பக்கத்திலுள்ள சந்தைக் கடையில் நேற்று அதிகாலை இத்துணிகர சம்பவம் நடைபெற்றது.

செல்லையா இரத்தினம் என்பவரே தாக்குதலுக்குள்ளான கடைஉரிமையாளராவார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், குறிப்பிட்ட கடைக்கு வந்து கதவைத்தட்டி பக்கத்திலுள்ள மரணச்சடங்குக்கு வந்திருப்பதாகவும், சிகரட் தருமாறும் கேட்டாராம். கடை உரிமையாளர் கதவைத் திறக்கவே இருநபர்களும் அவரின் தொண்டையை நெரித்தபொழுது அவர் அவலக்குரல் எழுப்பினார். அயலவர்கள் ஓடிவரவே இருநபர்களும் தாங்கள் வந்த மோட்டார் சைக்கிளையும் விட்டுவிட்டுத் தப்பியோடிவிட்டனர்.

அவர்கள் விட்டுச்சென்ற மோட்டார் சைக்கிளைச் சுன்னாகம் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் கே. ராஜலிங்கம் தலைமையில் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. [மா-அ]

## ஐ. தே. க.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தினம் மூன்று இளைஞர்கள் இவரது இல்லத்துக்குச் சென்று அவரைச் சந்திக்க விரும்பியதாகவும் அவர் இல்லாமையால் கடிதம் ஒன்றைக் கொடுத்துவிட்டுச்சென்றதாகவும் தெரியவருகின்றது.

இம்மாதம் 30ம் திகதிக்கு முன் பதவியை ராஜினாமா செய்யவேண்டுமென்றும் இல்லையெனில் 'மரணதண்டனை' விதிக்கப்படும் என்றும் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததாம். 'சமூகவிரோதிகள் தமிழ் ஈழம்' என்றும் அக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததாம்.

கதிர்வேலாயுதசுவாமி கோவிலில்

## இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இன்று வெள்ளிக்கிழமை ஏழாவது நாள் ஈழத்துத் திருச்செந்தூர்ப் பெருமானுக்கு காலை 7-15 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும் சண்முகார்ச்சனையும், மாலை 5-30 மணிக்கு சந்தனக்காப்பு சாத்தப்பெற்ற ஷண்முகார்ச்சனையும் திருவிழாவும் நடைபெறும்.

## இன்று நடக்கும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்விவள நிலையமும், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையும் இணைந்து நடத்தும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான இந்துநாகரிகக் கருத்தரங்கு இன்று புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் நடைபெறும். வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வி. தங்கராசா தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருட்ணனும், விரிவுரையாளர்கள் திருமதி ஞானகுலேந்திரன், திருமதி கலைவாணி இராமநாதன், திருமதி சிவாநந்தேவ, திரு மா. வேதநாதன் ஆகியோரும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

## குழந்தையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்த சுபாஜினி குழந்தைக்குப் பால்கொடுத்து விட்டுத் தாலாட்டிக்கொண்டிருந்தார் திடீரென வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் இரக்கமில்லாமல் அவரைக்கத்தியால் வெட்டிவிட்டு அவர் அணிந்திருந்த தாலிக்கொடி, சங்கிலி, காப்பு, மோதிரம், குழந்தையின் கழுத்திலிருந்த சங்கிலி மற்றும் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர்

அப்பெண்ணின் காதிலிருந்த ஜிமிக்கியைக்கூடக் கொள்ளையர் விட்டுவைக்கவில்லை

வீடெல்லாம் ஒரே இரத்த வெள்ளமாகக்காட்சியளித்தது

சாவகச்சேரிப் பொலிசார் ஸ்தலத்துக்குச்சென்றுபார்வையிட்டபோது, இரத்தம்தோய்ந்த பிடி இல்லாதகத்தியைக் கண்டெடுத்தனர். அங்குள்ள இருமண்வெட்டிகளிலும் இரத்தக்கறை இருக்கக்காணப்பட்டது

பொலிசார்விசாரணைசெய்து வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (மா அ)

## டாக்டர் தர்மலிங்கத்தை பொலிசார் விசாரித்தனர்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ விடுதலை அணித்தலைவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் நேற்றுப் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

திருமலைச் சம்பவங்களுக்குத் துக்கம் தெரிவிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரி தமிழீழ விடுதலை அணி அறிக்கை வெளியிட்டிருந்தது தெரிந்ததே. இதுசம்பந்தமாகவே டாக்டர் விசாரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. (அ)

## இப்படியும் நடக்கிறது

சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த கே. இலட்சுமி என்பவர் பஸ்விபத்தில் மரணமானது பற்றியும், அவர் அணிந்திருந்த தங்கநகைகள் மாயமாக மறைந்தது குறித்தும் எழுதியிருந்தேன் அல்லவா?

அந்த நகைகள், உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதாக இப்பொழுது தகவல் கிடைத்திருக்கிறது

அதுவும், விபத்து நடந்த செய்தி கேட்டு துடித்துப்போன ஆயுள்வேத பெண் டாக்டர் ஒருவர், மரணமான பெண்ணின் நகைகள் பறிபோய்விடக் கூடாதே என்று கருதி பத்திரமாக வைத்திருந்து, உரிய உறவினர்களிடம் ஒப்படைத்திருக்கின்றார்!

ஆயுர்வேத பெண் டாக்டரின் இப் பெருந்தன்மையினால் பெண்இனத்துக்குப் பெருமை கிடைத்திருப்பதுடன் காரைநகரின் மதிப்பும் ஒருபடி உயர்ந்துவிட்டது!

* *

ஜேர்மனியிலிருந்து ஒருவர், தமிழ்இளைஞர்கள் அதிகமிருக்காகக் கொழும்பிலும் வேறு இடங்களிலும் கைது செய்யப்படுவது குறித்து யாழ்ப்பாணத்திலுள்ள தமது நண்பருக்கு இவ்விதம் எழுதியிருக்கின்றார்!

"ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான். இது அந்தக்காலம். பெடியன்களை வைத்துக்கொண்டு யோசித்து மண்டையை உடைப்பதிலும் பார்க்க ஐந்து பெண்களைப் பெற்றிருந்தால் நல்லதுபோல் தெரிகிறது..."

'ஊடுருவி'

## ஊரடங்கு...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

டது இவர் ஒருமாதத்துக்கு முன்னர்தான் திருமணமானவர்.

### பன்குளத்தில் பயங்கரம்

புதன்கிழமை நள்ளிரவு திருகோணமலையிலிருந்து பதினைந்தாவது மைல்தூரத்தில் உள்ள பன்குளம் என்ற இடத்தில் பயங்கரம் நிறைந்த சம்பவங்கள் நடைபெற்றுள்ளன ஒரு விடுதிக் அந்தப் பகுதியிலுள்ள தமிழ்க் குடும்பங்கள் பயத்தினால் ஒன்றாகத் தங்கியிருந்தார்கள். நள்ளிரவு நேரத்தில் ஆயுதங்களுடன் அந்த வீட்டுக்குள் நுழைந்த கோஷ்டியைக் கண்டவர்கள் அங்குமிங்குமாகச் சிதறிஓடினார்கள்,

காட்டுக்குள் மூச்சுத்திணற குழந்தை குட்டிகளோடு, மிகப்பரிதாபகரமாக ஓடியவர்கள்மீது தாறுமாறாக துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்ந்ததாம்.

ராஜகோபால் என்ற 40 வயது நபர் தனது ஒன்றரை வயதுப் பெண் குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கதறிய படியே குழந்தையை அணைத்தவாறு கீழே விழுந்தார் இவரது மனைவி பஞ்சவர்ணமும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

நேற்றுக் காலை பன்குளக் காட்டுக்குள்ளிருந்து பலரும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டனர்.

தந்தை ராஜகோபாலின் கைக்குள் குற்றுயிராகத் துடித்துக்கொண்டிருந்த ஒன்றரை வயதுக் குழந்தை தலைமன்னார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்ட நேரத்தில் அங்கு மரணமானது

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளோரது பெயர் விபரங்கள் சில:- லட்சுமிதேவி [33 வயது], அருணாசலம் (65 வயது], அழகையா [58 வயது], தங்கராசா, அவரது ஒருவயது மகன், எஸ் மகேஸ்வமணி (28 வயது].

ஒரு இனந்தெரியாத கோஷ்டியினரால் அபயபுரத்தில் காந்திராஜா என்ற (26வயது] இளைஞர் வாள் வெட்டுக்கு இலக்கானார். இவருக்குக் கழுத்துப் பகுதியிலும், தலையிலும் பலத்த வெட்டுக் காயங்கள் இருந்தன விமானம் படையினர் இவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்து, சத்திரசிகிச்சைக்காகக் கொண்டுசெல்லப்பட்டபோது அவர் மரணமானார்!

இன்னொரு இளைஞரான மகேந்திரன் என்பவரும் வாள் வெட்டுக்கு இலக்காகி, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டார்!

வேப்பங்குளத்தில் துப்பாக்கிச் சூடு புதன்கிழமை இரவு நிகழ்ந்துள்ளது. இதில் 33 வயதான அந்தோனி என்பவர் காயங்களுக்குள்ளானார்.

பண்மதவாச்சி என்ற நாலாவது வாய்க்காலில் இரண்டு தமிழ்க் கடைகள் உடைக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

பாலையூற்றில் பத்துத் தமிழர் வீடுகள் இதுவரை தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. முருகன் வீதி, பூம்புகார் வீதி சுடுகாடு போன்று காட்சியளிக்கின்றன.

பாலையூற்றில் ஒரு சினிமாத் தியேட்டர்தான் இருக்கிறது. 'நிர்மலகாந்த்' என்ற இந்தத் தியேட்டரிலுள்ள தொலைபேசியே இப்பகுதி மக்களுக்கு மற்ற இடங்களுடன் தொடர்பு கொள்வதற்கு ஒரே சாதனமாக இருந்து வந்தது. ஆனால் இது விஷமிகளால் நேற்று முற்றாக அறுக்கப்பட்டுவிட்டது.

திருகோணமலையில் இன்றும் காலை எட்டு மணி முதல் பகல் இரண்டு மணிவரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு பின்னர் தொடர்ந்து அமுல் செய்யப்படும்.

## யாழ்.பல்கலைக்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நாளாந்தம் பெருகிவரும் தமிழ் மக்களின்மீதான தாக்குதலுக்கு எதிராகத் தமிழ் மக்கள் உணர்வுபூர்வமாக ஒன்றுபட்டுத் தங்களஎதிர்ப்பை இவ்வாரக்குக் காட்டுமாறு தமிழ் மக்களுக்குக் கோரிக்கையொன்றையும் விடுத்துள்ளனர். [மா]

## உயர்மட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழு மாத இறுதியில் வரவிருக்கிறது.

இந்த உயர்மட்டக் குழுவில் அமைச்சரவைச் செயலாளர் திரு. ஜி. வி. பி. சமரசிங்க, பொலிஸ் மா அதிபர் திரு. ருத்திரா ராஜசிங்கம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் இருக்கின்றனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் அதைபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1988—ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under nnmber B. 100236/81. Eelanadu-P. O. Box, 49, Telegram: Eelanadu, Telephone: 22389 — 24126.